1968 ஆகஸ்ட் 20]

திரு. க. இராமமூர்த்தி : இதுவரை இந்த ஆயிரம் ரூபாய் பரிசு பெற்ற அதிகாரிகள் எவ்வளவு பேர்கள்? அதிகம் பேர்கள் பெற்றிருந்தாலும் அல்லது பெருமலிருந்தாலும் இப்படி பரிசு தருவதை ஒரு நிகழ்ச்சியாக நடத்தினால் மேலும் அதிகாரிகள் இதில் ஊக்கம் கொண்டு விரைவாக முன்னேற வசதியளிக்கும் அல்லவா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : நல்ல யோசனை, கவனிக்கப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, cash awards are given to non-Tamil Indian Administrative Officers. Is that facility given to other Subordinate Indian Officers also?

THE HON. THIRU C. N. ANNADURAI : At present only I.A.S. and I.P.S. officers are covered by this scheme.

வட்ட அலுவலக எழுத்தர்களுக்கு வீட்டு வாடகைப் படி

*42 **வின.—திரு. என். மருதாசலம் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப் பாரா—

கோவை மாவட்டத்தில் திருப்பூர், ஈரோடு, கோவை ஆகிய இம்மூன்று தாலுக்கா அலுவலகங்களில் பணிபுரியும் எழுத்தர் களுக்கு வீட்டு அலவன்ஸாக ரூ. 5-ம் ரூ. 7-ம் கொடுக்கப் படுவதைப் போல் மற்ற தாலுக்கா அலுவலகங்களில் பணிபுரியும் எழுத்தர்களுக்கு ஏன் கொடுக்கப்படுவதில்லை ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : வீட்டு வாடகைப் படி வழங்குவதற்காக, முக்கியமாய் மக்கள் தொகை அடிப்படை யிலும் அந்தந்தப் பகுதிகளில் வீட்டு வசதிப் பற்றாக்குறை நிலையையும் பொறுத்து, ஊர்கள் வகைப்படுத்தப்படுகின்றன. 50,000-க்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட நகரங்களில் ரூ. 300-ம், அதற்குச் குறைந்தும் சம்பளம் பெறும் அரசாங்க ஊழியர்களுக்கு அவர்களின் சம்பள அடிப்படையில் திங்கள் ஒன்றுக்கு ரூ. 5, 7, 9, 12 என்று வீட்டு வாடகைப் படி அளிக்கப் படுகிறது. வீட்டு வாடகைப் படி விதங்கள் வரையறுக்கப் பட்டபோது, கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள பிற வட்டத் தலைமையிடங்களில் மக்கட் தொகை 50,000-க்கும் குறைவாகவே இருந்தது; எனவே இந்த இடங்களில் பணியாற்றும் ஊழியர் களுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 3 என்கிற ஒரு படிதான் குறைந்த விதத்திலேயே வீட்டு வாடகைப் படி அளிக்கப் படுகிறது.

திரு. என். மருதாசலம் : கோவை, ஈரோடு, திருப்பூர் போன்ற விடங்களில் உள்ள தாலுகா ஆபீஸ்களில் பணிபுரியும் எழுத்தர் களுக்கு ரூ. 5, 7 வாடகைப் படி கொடுக்கிறார்கள். ஆனால் மற்ற இடங்களிலுள்ள தாலூகா ஆபீஸ் எழுத்தாளர்களுக்கு கொடுப் பதில்லை, காரணம், ஜனத்தொகை அடிப்படையில் கொடுப் பதாகச் சொன்னார்கள். பொள்ளாச்சியில் அதிகப்படி ஜனத் தொகை இருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதிக்கு ஏன் கொடுப் பதில்லை ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இந்த விகிதம் வரையறுக்கப்பட்டபோது அந்தந்த ஊர்களிலுள்ள ஜனத்தொகை அளவில் விவரம் என்னிடமிருக்கிறது. அந்த அடிப்படையில் தான் அந்த விகிதங்கள் எல்லாம் வரையறுக்கப்பட்டன. ஏதாவது ஊரில் ஜனத்தொகை ஏறிவிட்ட பிறகு தகவல் கிடைத்து அது பற்றி சர்க்காரிடத்தில் எடுத்துச் சொல்லப்படுமானால் அது திருத்தியமைக்கப்படுவது கவனிக்கப்படும்.

Stray cattle in City

* 43. Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : will the Hon. the Chief Minister we pleased to state the steps proposed to be taken to stop the stray cattle menace in the residential areas in Madras City?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : பொது இடங்களில் அல்லது தனியார் இடங்களில் திரியும் கால்நடைகள் 1888-ம் ஆண்டு சென்னை மாநகர் காவலர் சட்டத்தில் (தமிழ்நாடு சட்டம் 3/1888) 23-வது, 60-வது பிரிவுகளின்கீழ், பிடிக்கப்பட்டு, பல்வேறு காவல் நிலையங்களுடன் இணைக்கப்பட்டுள்ள பட்டிகளில் அடைக்கப்படுகின்றன. கால்நடைகளுக் குரியவர்கள் அவைகளை 10 நாட்களுக்குள் மீட்டுச் சென்றால், பட்டியில் வைத்திருந்ததற்காக, வெள்ளாடு, செம்மறியாடு, பன்றி இவை ஒவ்வொன்றுக்கும் 50 காசு வீதமும், ஏனைய விலங்கு ஒன்றுக்கு ரூ. 1 வீதமும் கட்டணம் வசூலிக்கப் படுவதுடன், அடைக்கப்பட்டிருந்த விலங்குகளைப் பேணி வருவதற்கான செலவுத் தொகையும் உடைமையாளரிடமிருந்து வசூலிக்கப்படும். கால்நடைகளுக்குரியவர்கள் அவைகளை 10 நாட்களுக்குள் மீட்கப்படவில்லை என்றால், அவை பொது ஏலத்தில் விற்கப்படும். விற்ற முதல் தொகையிலிருந்து கட்டணத்தையும் தீனிச் செலவுகளையும் கழித்து பிறகு எஞ்சிய தொகையை உரியவர்களிடம் கொடுக்கப்படும். கால்நடையின் சொந்தக்காரர் விற்ற முதல் தொகையை விற்பனைத் தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் கேட்டுப் பெறாவிட்டால், அது காவல்துறை காரியங்களுக்குப் பயன்படத்தக்க ஏதாவதொரு நிதியில் சேர்க்கப்படும். 1888-ம் ஆண்டு சென்னை மாநகர் காவலர் சட்டத்தில் 60-ம் பிரிவைத் திருத்தி மேலே குறிப்பிட்ட பட்டிக் கட்டணத்தை அதிகரிப்பது குறித்த செயற்குறிப்பு ஆலோசனையில் இருந்து வருகிறது. கால்நடைகள் அலைந்து திரிவதைச் செம்மையாகத் தடுப்பதுதான் இதன் நோக்கமாகும்.

திரு. ஆர். கருப்பையா : இதுபோன்று பட்டிகளில் அடைக்கப்படும் கால்நடைகளின் தீவனத்திற்காக பணம் எடுத்துக் கொண்டாலும்கூட அவைகளுக்கு ஒழுங்காக தீவனம் கொடுக்கப்படுவதில்லை என்பது நாடறிந்த உண்மை. ஆகவே, சரியானபடி அவைகளுக்கு தீவனம் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?